செ.வெ.எண்.40 நாள்:16.05.2017

# திருநெல்வேலி மானூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ”தேசிய டெங்கு தினம்” மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

---

திருநெல்வேலி மாவட்டம் மானூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக கூட்ட அரங்கில் மாவட்ட பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறையின் சார்பில் ”தேசிய டெங்கு தினம்” விழிப்புணர்வு கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (16.05.2017) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் முகாமினை துவக்கி வைத்து பேசியதாதவது:-

திருநெல்வேலி மாவட்டத்தில் புளியங்குடி மற்றும் கடையநல்லூர் உள்ளிட்ட சில பகுதிகளில் டெங்கு காய்ச்சல் அறிகுறிகள் உள்ளது. திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் தினசரி சராசரியாக சுமார் 10 நபர்கள் டெங்கு காயச்சல் அறிகுறிகளுடன் அனுமதிக்கப்படுகின்றனர். இந்த பாதிப்பினை குறைத்திடும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் வட்டாரத்திற்க்கு 20 டெங்கு கொசு ஒழிப்பு பணியாளர்கள் நியமிக்கப்பட்டு புகைமருந்து அடிக்கும் பணிகள், வீடு வீடாக சென்று தேக்கி வைக்கப்பட்டுள்ள நீரில் அபேட் மருந்து கலக்கும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

டெங்கு காய்ச்சல் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மருத்துவ முகாம்களும் நடத்தப்பட்டு வருகிறது. அரசு பல்வேறு நடவடிக்கைகள் எடுத்தாலும் டெங்குவை முற்றிலும் ஒழிக்க பொதுமக்களும் ஒத்துழைக்க வேண்டும். சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும். தேங்காய் சிரட்டை, உடைந்த பானை, பழைய உரல், டயர்களில் மழை நீர் தேங்குவதால் டெங்கு கொசு உற்பத்தியாகி டெங்கு காய்ச்சல் பரவ வாய்ப்புள்ளது. டெங்கு காய்ச்சல் பாதிப்பால் இரத்தத்தில் எதிர்ப்பு சக்தி குறைந்து உயிருக்கு ஆபத்து ஏற்படவும் வாய்ப்புள்ளது. எனவே பொதுமக்கள் எந்த காய்ச்சலாக இருந்தாலும் அருகில் உள்ள மருத்துவமனையில் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். சுற்றுப்புற தூய்மையை பராமரித்து டெங்கு கொசுவை ஒழிப்பதன் மூலம் டெங்கு காய்ச்சல் வராமல் முழுமையாக தடுக்க முடியும் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்கவும், காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிறந்த மருத்துவம் அளித்து அவர்கள் பூர்ண குணமடைய தேவையான அனைத்து வசதிகளையும் அரசு செய்து வருகிறது. என்றார்.

முன்னதாக டெங்கு காய்சல் வழிப்புணர்வு சுகாதார உறுதிமொழி மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இக்கூட்டத்தில் துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் (திருநெல்வேலி) மரு.ராம்கணேஷ், (சங்கரன்கோவில்) மரு.செந்தில்குமார், வட்டார மருத்துவ அலுவலர் மரு.மணிகண்டன், மானூர் வட்டார டெங்கு ஒழிப்பு மருத்துவக்குழு உறுப்பினர் மரு.டேனியல், மாவட்ட நோய் தடுப்பு அலுவலர் திரு.மீரன்மைதீன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.